தினமணி

# ஐப்பசியில் மிளகாய் விதைத்தால் நல்ல லாபம்

First Published : 03 Nov 2011 01:27:36 AM IST



விருத்தாசலம் : ஐப்பசி மாதத்தில் மிளகாய் விதைப்பு லாபகரமாய் இருக்கும் என்று வேளாண்துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து கடலூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் தனவேல் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் அமுதா ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இந்தியா முதலிடம்: உலக அளவில் மிளகாய் உற்பத்தியிலும், பயன்பாட்டிலும் இந்தியா முதலிடத்தில் உள்ளது. சீனா, பாகிஸ்தான், பெரு, பங்களாதேஷ் போன்ற நாடுகளும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. உணவில் சுவையை அதிகரிக்க மட்டும் அல்லாமல், மருத்துவம், எண்ணெய், சாயமேற்றுதல் போன்ற பயன்பாட்டுக்கும் மிளகாயின் தேவை உலகளவில் அதிகரித்துள்ளது.

இந்திய அளவில் மிளகாய் உற்பத்தியில் தமிழ்நாடு 7-வது இடத்தில் உள்ளது. 2008-09-ம் ஆண்டு கணக்கின்படி 64,412 ஏக்கர் பரப்பளவில் 32,924 டன் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது. ராமநாதபுரம், தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, சங்கரன்கோவில் போன்ற பகுதிகளில் அதிகளவில் மிளகாய் உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்த மிளகாய் உற்பத்தியிலும், பரப்பளவிலும் ராமநாதபுரம் 47 சதவீதமும், தூத்துக்குடி 62.5 சதவீதமும் உள்ளது.

கூடுதல் விலை: தமிழ்நாட்டில் மொத்த மிளகாய் உற்பத்தியில் 58 சதவீதம் மானவாரி நிலங்களில் உற்பத்தியாகிறது. 2010 ஜூலை முதல் செப்டம்பர் வரை விருதுநகர் சந்தையில் வற்றல் மிளகாய் கிலோவிற்கு ரூ. 31 முதல் 49 வரை விற்கப்பட்டது. இப்போது கிலோவிற்கு ரூ. 82 முதல் 89 வரை விற்கப்படுகிறது. அண்டை மாநிலமான ஆந்திராவில் இந்த ஆண்டு காரீப் பருவத்தில் பயிரிடப்பட்ட மிளகாயின் பரப்பளவு குறைவாக இருந்ததே இதற்கு காரணம் என்று தெரிய வருகிறது.

தமிழ்நாட்டில் வற்றல் மிளகாயை உற்பத்தி செய்ய ஐப்பசி (அக்டோபர்-நவம்பர்) மாதத்தில் மிளகாய் நாற்றங்கால் விடப்படும். அல்லது நேரடி விதைப்பு செய்யப்பட்டு, மாசி, பங்குனியில்

(பிப்ரவரி-மார்ச்) அறுபவடை செய்யப்படும். சித்திரை, வைகாசியில் சந்தை வரத்துகள் அதிகமாக இருக்கும்.

அவ்வாறு ஐப்பசியில் விதைக்கப்படும் மிளகாய்க்கு அறுவடையின் போது நல்ல விலை கிடைக்குமா என்பது விவசாயிகளின் சந்தேகம்.

ஆய்வு: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்மாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தில் மேற்கொண்ட ஆய்வின்படி, மிளகாய் வற்றலுக்கு விருதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 2012 பங்குனி, சித்திரை மாதங்களில் கிலோவிற்கு ரூ. 60 முதல் 70 வரையிலும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆந்திர மாநிலத்தில் மிளகாய் உற்பத்தியின் பரப்பளவு குறைந்துவிட்ட தருணத்தில் தமிழகத்தில் மிளகாய் பயிர் செய்தால், வற்றலுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே, விவசாயிகள் ஐப்பசியில் மிளகாய் விதைப்பால் நல்ல பலனை அடையளாம்.

நோய் கட்டுப்பாடு: மிளகாயைத் தாக்கும் வேர் அழுகல் நோயைக்கட்டுப்படுத்த 1 கிலோ விதைக்கு 10 கிராம் ட்ரைக்கோடெர்மாவைக் கலந்து நாற்றங்காலில் விதைக்க வேண்டும். அல்லது 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் ரிடேமில் கலந்து நாற்றங்கால் படுக்கையில் தெளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

**சொட்டுநீர்ப் பாசனம் "விவசாயிகளின் விடியல்'**

First Published : 03 Nov 2011 01:26:45 AM IST



மாஞ்செடிகளுக்கு பயன்படுத்தப்படும் சொட்டுநீர்ப் பாசனம்.

விழுப்புரம்: பழைய பாசன முறைகளை கைவிட்டு, நவீன தொழில்நுட்பத்திலான சொட்டுநீர் பாசன முறையை விவசாயிகள் பயன்படுத்தினால் விடியலை நோக்கிச் செல்லலாம் என்று வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் உள்ள மொத்த நீர்த்தேவையில் 85 சதவீதம் நீர் வேளாண்மைக்காக பயன்படுத்தப்படுகிறது. இதில் கால்வாய் மூலம் பாசனம் செய்வதில் பாசனத் திறன் 20 முதல் 50

சதவீதம் மட்டுமே. மீதம் 50 முதல் 80 சதவீதம் நீர் சரியான பாசன முறைகள் இல்லாததால் வீணாகிறது.

மேலும் போதுமான அளவில் காடுகள் இல்லாதது, பசுமைக்குடில் வாயுக்கள், மழையின்மை மற்றும் தொடர் வறட்சி போன்ற காரணங்களால் நிலத்தடி நீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ள நிலையில், எதிர்காலத்தில் தண்ணீர், தங்கத்தை விட விலையுயர்ந்த பொருளாக கருதுவதற்கு வாய்ப்புள்ளது.

இந்நிலையில் இன்னுமொரு உலகப்போர் நிகழுமானால் அது நல்ல தண்ணீருக்காக கூட இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். நமது நாட்டில் குஜராத் போன்ற மாநிலங்களில் அதிகப்படியாக நிலத்தடி நீரை பயன்படுத்தியதன் காரணமாக கடல் நீர் நிலத்தடி நீராக இடம் பெயர்ந்ததால் விவசாயிகள் விவசாய நிலங்களை கைவிட நேர்ந்த அவலத்தை அனைவரும் அறிந்தது.

இந்நிலையில் ஆஸ்திரேலியாவின் ஆண்டு மழைப் பொழிவு 250 மி.மீ. மட்டுமே. ஜப்பானில் சரியான மண் வளம் இல்லை. இஸ்ரேல் நாட்டில் மணல் சார்ந்த மண் வகைகள் மட்டுமே உள்ளது. இருப்பினும் இந்த நாடுகளில் குறைவான மழை வளம், மண்வளம் உள்ள நிலையி0ல் சொட்டுநீர் பாசன அமைப்புகளை பயன்படுத்தி உலகுக்கே முன்மாதிரியாக, இந்த நாட்டினர் பழம் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்கின்றனர். ஆனால் இந்தியாவில் சராசரி ஆண்டு மழை பொழிவு 900 மி.மீ. ஆகவும், அனைத்து வகையான மண் வகைகளும், பல்வேறு சாதகமான சீதோஷ்ண நிலைகளும் உள்ள நிலையில் சொட்டுநீர் பாசன அமைப்புகளின் பயன்பாடுகள் பற்றி நமது விவசாயிகள் உணராமல் காய்கறிகள், பழப் பயிர்கள் உற்பத்தியில் உலகில் நாம் இரண்டாம் இடத்திலேயே உள்ளோம்.

எனவே விவசாயிகள் நீர் சிக்கனத்தை கையாளவும், எதிர்கால சந்ததியினருக்கு நீரினை சேமித்து வைக்கவும், சரியான நீர்பாசன முறைகளை அறிந்து கொள்வதும், தற்போதைய அவசிய தேவையாக உள்ளது.

இதற்கு மத்திய, மாநில அரசுகள் அதிக முக்கியத்துவம் கொடுத்து மானியமும் வழங்கி விவசாயிகளை ஊக்குவிக்கிறது. சொட்டுநீர் பாசனம் ஒரு தீர்வாக உள்ளது என்பதை விவசாயிகள் உணர்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்தினால், பாசன செலவு குறைவு, 50 முதல் 65 சதவீதம் தண்ணீர் சிக்கனம், 50 முதல் 60 சதவீதம் வரை உரம் சிக்கனம், களைக் கட்டுப்பாடு செலவு 40 சதவீதம் குறைவு. மண்ணில் காற்றோட்டம், அதனால் சீரான வேர்களின் வளர்ச்சி, ஒரே சீரான பயிர் வளர்ச்சி, பயிர்களுக்கு இடையே குறைவான ஈரப்பதம் காரணமாக பூச்சி, நோய் கட்டுப்பாடு, தரமான விளைபொருள்கள், ஆண்டு பயிர்களில் 15 முதல் 52 சதவீதம் வரை கூடுதல் மகசூல், தரம் குறைந்த நீரையும் பாசனத்துக்காக பயன்படுத்தலாம் என்பன உள்ளிட்ட பயன்கள் இதில் உள்ளன.

**தோட்டக்கலை அதிகாரிகள் விளக்கம்**

நவீன சொட்டுநீர் பாசன முறையில் நீர்சேமிப்பு குறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் முனைவர் வீராசாமி கூறியது:

காய்கறி பயிர்களான கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய், பூசணி வகைகள், வெங்காயம் போன்ற பயிற்களுக்கு பாரம்பரய முறைப்படி தேவைப்படும் 3 முதல் 8 லிட்டர் நீருக்கு பதிலாக 1 முதல் 2 லிட்டர் நீர் வரை நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு செடிக்கும் அளித்து நீர்பாசனம் செய்வதால் 39 முதல் 62 சதவீதம் நீர்சேமிப்பும், 14 முதல் 50 சதவீதத்துக்கு கூடுதலான மகசூலும் கிடைக்கிறது.

இதேபோல் செடி முருங்கை, வாழை, மரவள்ளி, சாமந்தி, மஞ்சள், பப்பாளி, கொய்யா, சப்போட்டா, பெருநெல்லி, முந்திரி, மா, திராட்சை, மாதுளை, எலுமிச்சை, புளியன், தென்னை உள்ளிட்ட பயிர்களுக்கும் இந்த சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்தினால் நீர் சேமிப்புடன், மகசூலும் அதிகம் பெறலாம் என்றார்.

மேலும் தோட்டக்கலை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் கூறியது: விவசாயிகள் நாட்டின் நலனையும், எதிர்கால சந்ததியினரின் நலத்தையுயும் கருத்தில் கொண்டு விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலைத் துறை மூலம் ஒவ்வொரு ஒன்றியங்கள் மூலம் தற்சமயம் செயல்படுத்தப்பட்டு வரும் துல்லிய பண்ணையம், சொட்டுநீர்ப் பாசன திட்டங்களில், மானியவிலையில் சொட்டுநீர் பாசனம் அமைத்து தாங்கள் சாகுபடி செய்ய விரும்பும் தோட்டக்கலைப் பயிர்களில் நீர் சேமிப்பும், கூடுதல் மகசூலும் பெற்று பயன்பெறலாம். மேலும் நவீன விதை, நவீன உரம், உயர் தொழில்நுட்பமான சொட்டுநீர் பாசனம் ஆகியவைகளுடன் நம்மிடம் உள்ள சிறந்த இயற்கை விவசாய மூலங்களை சீரிய முறையில் பயன்படுத்தலாம்.

இந்த பாசன முறையை ஏற்றுக் கொள்ளும் விவசாயிகளின் சீரிய மனோபாவத்தாலும் விவசாயிகள் விடியலை நோக்கி முன்னேறலாம் என்று தெரிவித்தார்.

**டி.ஏ.பி. உரம் விலை கடும் உயர்வு**

First Published : 02 Nov 2011 01:24:56 PM IST

திருவாடானை, நவ. 1: திருவாடானை தாலுகாவில் உள்ள கூட்டுறவு சங்கங்களிலும், கடைகளிலும் உரம் கடும் விலை உயர்வால் விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.

திருவாடானை தாலுகா தமிழகத்தின் இரண்டாவது நெல் களஞ்சியம் ஆகும். நடப்பு சம்பா பருவத்தில் சுமார் 45 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நேரடி நெல் விதைப்பிலும், நாற்று நட்டும் விவசாயம் செய்து வருகின்றனர்.

தற்போது தொடர் மழை காரணமாக பயிர்கள் நன்கு வளர்ந்து உரமிடும் தருணத்தில் உள்ளன. டிஏபி, பொட்டாஷ், யூரியா போன்ற உரங்கள் கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன் டி.ஏ.பி. உரம் ரூ.520 க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது கூட்டுறவு சங்கங்களில் ரூ.950, கடைகளில் ரூ.1050க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே போல் மற்ற உரங்களின் விலையும் அதிகரித்துள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடந்த ஆண்டு உரம் விற்பனை செய்யப்பட்டது. தற்போது போதுமான அளவு உரம் வழங்காததால் இருப்பு இல்லை என்று கூட்டுறவு சங்க செயலாளர்கள் கூறுகின்றனர்.

பில்லூர் விவசாயி இராமநாதன் கூறியது:

தற்போது சம்பா பருவத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மழை இல்லாததாலும், அரசின் 100 நாள் வேலை திட்டத்தில் பெண்கள் அதிகம் ஈடுபடுவதாலும் களை மாற்று நாற்று நடும் பணிக்கு விவசாயக் கூலிக்கு ஆள்கள் கிடைப்பது மிகவும் சிரமமாக உள்ளது.

இந்நிலையில் உரம் விலை உயர்வால் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரசு தனிக்கவனம் செலுத்தி உரம் விலையை குறைத்து தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**திருவாடானை பகுதியில் தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 02 Nov 2011 01:24:44 PM IST

திருவாடானை, நவ. 1: திருவாடானை தாலுகா தொண்டி, நம்புதாளை, வட்டாணம், தீர்த்தாண்டதானம் போன்ற கடற்கரைப் பகுதிதிகளில் தொடர் மழையால் கண்மாய், குளங்கள் நிரம்பின. இதனால் விவசாயப் பணிகள் மும்மரமாக நடைபெறுகின்றன.

இப்பகுதியில் கடந்த இரண்டு நாள்களாக் தொடர் மழை பெய்து வருகிறது. திங்கள்கிழமை இரவு விடிய விடிய மழை கொட்டியது.

**தமிழகம், புதுவையில் இன்றும் மழை வாய்ப்பு**

First Published : 03 Nov 2011 02:16:46 AM IST



கோவையில் பெய்துவரும் தொடர் மழையால், சுண்ணாம்புக் களவாய் பகுதியில் அருவிபோல பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம்.

சென்னை, நவ. 2: தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும், புதுவையிலும் வியாழக்கிழமை கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

÷இதுகுறித்து வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் கூறியது: குமரிக் கடல் முதல் தெற்கு ஆந்திரம் வரை செவ்வாய்க்கிழமை நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை, மன்னார் வளைகுடா, பாக் நீரிணை மற்றும் தமிழகத்தை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக் கடல் வழியாகச் செல்ல உள்ளது.

எப்போதெல்லாம் மன்னார் வளைகுடாவில் காற்றழுத்தத் தாழ்வுநிலை, நிலைகொண்டுள்ளதோ, அப்போதெல்லாம் தமிழகத்தில் கனமழை பெய்துள்ளது. இதுபோல் கடந்த 36 மணி நேரத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக மரக்காணத்தில் 120 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

வரும் 12 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. உள்பகுதி மாவட்டங்களில் ஓரிரு பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னை நகரில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். விட்டு விட்டு மழை பெய்யும் என்றார்.

கடந்த 36 மணி நேரத்தில் தமிழகத்தில் பதிவான மழை விவரம் (அளவு மில்லி மீட்டரில்)

மரக்காணம் - 120

கடலூர் - 110

புவனகிரி - 110

தேக்கடி - 100

மாமல்லபுரம் - 90

சின்ன கல்லாறு - 90

மருங்காபுரி - 90

வேடசந்தூர் - 90

தொழுதூர் - 80

காமாட்சிபுரம் - 80

கும்மிடிப்பூண்டி - 80

கேளம்பாக்கம் - 70

குளச்சல் - 70

மேட்டூர் அணை - 70

ஏற்காடு - 70


வெம்மாவூர் - 70

நிலக்கோட்டை - 70

தினமலர்
உண்மையின் உரைகல்

# நாட்டின் காபி ஏற்றுமதி 20 சதவீதம் சரிவு

நவம்பர் 03,2011,00:07




புதுடில்லி:சென்ற செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த பருவத்தில், நாட்டின் காபி ஏற்றுமதி, அளவின் அடிப் படையில், 20 சதவீதம் சரிவடைந்து, 19 ஆயிரத்து 195 டன்னாக குறைந்துள்ளது. இது, கடந்த அக்டோபர் முதல் செப் டம்பர் வரையிலான பருவத்தில், 24 ஆயிரத்து 119 டன்னாக இருந்தது என, காபி வாரியத்தின் புள்ளி விவரத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இதே காலத்தில், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி 6 சதவீதம் வளர்ச்சி கண்டு, 255.45 கோடி ரூபாயிலிருந்து, 271.74 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.கடந்த 2010ல் அக்டோபர் மாதத்தில், ஏற்றுமதிக்கான ஒரு டன் காபியின் விலை, 1 லட்சத்து 5 ஆயிரத்து 912 ரூபாயாக இருந்தது. இது, நடப்பாண்டு அக்டோபரில், 34 சதவீதம் உயர்ந்து, 1 லட்சத்து 41 ஆயிரத்து 568 ரூபாயாக அதிகரித்துள்ளது. காபி விலை அதிகரிப்பால் தான், மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதி உயர்ந்துள்ளது என, காபி வாரியம் தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டின், முதல் ஏழு மாத காலத்தில் (ஏப்ரல் - அக்டோபர்), நாட்டின் காபி ஏற்றுமதி, 18 சதவீதம் அதிகரித்து, 2 லட்சத்து 10 ஆயிரத்து 562 டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில், 1 லட்சத்து 78 ஆயிரத்து 75 டன்னாக இருந்தது.நடப்பு 2011ம் காலண்டர் ஆண்டில் (ஜனவரி-அக்டோபர்), இதன் ஏற்றுமதி, 25 சதவீதம் வளர்ச்சி கண்டு, 3 லட்சத்து 10 ஆயிரத்து 657 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 2 லட்சத்து 48 ஆயிரத்து 545 டன்னாக இருந்தது.நம் நாட்டிலிருந்து இத்தாலி, ஜெர்மனி, ரஷ்யா, பெல்ஜியம் மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளுக்கு, காபி அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தொடர் மழையால் வெளியூர் காய்கறி வரத்து சரிவு

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,02:26 IST

சேலம்: தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையால், கேரட், பீன்ஸ் உள்ளிட்ட வெளியூர் காய்கறிகளின் வரத்தில் சரிவு ஏற்பட்டதை அடுத்து அவற்றின் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.குளிர் பிரதேசங்களில் விளையும் கேரட், பீன்ஸ், பீட்ரூட் ஆகிய காய்கறிகள் ஊட்டி, கொடைக்கானல், நீலகிரி மாவட்டத்தின் மலைப் பிரதேசங்களில் இருந்தும் பெங்களூருவில் இருந்தும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. மலைப்பிரதேசங்களில் பெய்து வரும் மழையால், தண்ணீர் தேங்கி உள்ளது. அத்துடன் சில இடங்களில் வெள்ளம் கரை புரண்டு ஓடுவதால், காய்கறிகளின் அறுவடை பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது.வரத்து குறைந்துள்ள நிலையில் காய்கறிகளின் தேவை இருமடங்காக உயர்ந்துள்ளது. இதனால் காய்கறிகளுக்கு மவுசு அதிகரித்து அவற்றின் விலை கடந்த மாதத்தை விட தற்போது உயர்ந்துள்ளது. குறிப்பாக உருளைக்கிழங்கு, கேரட், முட்டை கோஸ், பீட்ரூட், காலி பிளவர் ஆகியவற்றின் விலை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது.* உழவர்சந்தைகளில் காய்கறி விலை விபரம்: வெளிமார்க்கெட்டை விட உழவர்சந்தைகளில் காய்கறிகளின் விலையில் சற்று குறைவாகவே இருக்கும்.

ஆனால், வரத்து சரிவு காரணமாக நேற்று உழவர்சந்தைகளிலும் காய்கறிகளின் விலையில் உயர்வு ஏற்பட்டது.கடந்த வாரம் கிலோ, 16 ரூபாய்க்கு விற்ற உருளைக்கிழங்கு, 22 ரூபாய்க்கும், கேரட், 24 ரூபாய்க்கு விற்றது, 30 ரூபாய்க்கும், காலிபிளவர், 8 ரூபாய்க்கு விற்றது, 12, 15 ரூபாய்க்கு விற்கிறது. பீன்ஸ், 20 ரூபாய்க்கு விற்றது, 26 ரூபாய்க்கு விற்கிறது.

முட்டைக் கோஸ், 12 ரூபாய்க்கு விற்றது, 14 ரூபாய்க்கும், பீட்ரூட் எட்டு ரூபாய்க்கு விற்றது, 14 ரூபாய்க்கும், புதிய இஞ்சி கிலோ, 18 ரூபாய்க்கு விற்றது, 22 ரூபாய்க்கும், பெரிய வெங்காயம், 16 ரூபாய்க்கு விற்றது, 18 ரூபாய்க்கும் விற்கிறது.வெளியூர் காய்கறிகளை தொடர்ந்து உள்ளூர் காய்கறிகளின் விலையிலும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கத்தரிக்காய், 8 ரூபாய்க்கு விற்றது, 12 ரூபாய்க்கும், தக்காளி, 20 ரூபாய்க்கு விற்றது, 28 ரூபாய்க்கும், பாகற்காய், 15 ரூபாய்க்கு விற்ற, 17 ரூபாய்க்கும், சின்ன வெங்காயம், 20 ரூபாய்க்கு விற்றது, 25 ரூபாய்க்கும் விற்கிறது.

உழவர் சந்தை விலையை விட வெளிமார்க்கெட்டில் அனைத்து காய்கறிகளின் விலையிலும் கிலோவுக்கு, 5 ரூபாய் முதல், 12 ரூபாய் வரை அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது.தற்போது பெய்து வரும் மழை வரும் இன்னும் ஒரு வாரம் தொடரும் பட்சத்தில் காய்கறிகளின் விலையில் மேலும் உயர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். காய்கறிகளின் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு பெண்கள், ஹோட்டல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.இது குறித்து பனமரத்துப்பட்டியை சேர்ந்த காய்கறி வியாபாரி தங்கவேல் கூறியதாவது:தமிழகத்தில் பெய்து வரும் தொடர் மழையால் விளை நிலங்களில்

தண்ணீர் தேங்கி உள்ளதால், விவசாயிகளால் காய்கறிகளை அறுவடை செய்ய முடியவில்லை. இதனால் மார்க்கெட்டுக்கான வரத்து சரிந்துள்ளதால் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.மேலும், தற்போது பெய்யும் மழை தொடர்ந்தால் காய்கறிகள் அழுகும் நிலைக்கு தள்ளப்பட்டு விடும். இதனால் மார்க்கெட்டில் அவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால், வியாபாரிகள் அதிக அளவில் காய்கறிகளை குளிர்பதன கிடங்குகளில் தேக்கி வைக்க துவங்கி விட்டனர்.இதன் காரணமாக காய்கறிகளின் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வு வரும், 2012 பொங்கல் பண்டிகை வரை தொடரும்.இவ்வாறு அவர் கூறினார்.

**வாழைத்தார் விலை கிடு கிடு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,02:52 IST

ப.வேலூர்: தினசரி மார்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைவால், அதன் விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது.ப.வேலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியான நன்செய் இடையாறு, பொய்யேரி, குப்புச்சிபாளையம், பொத்தனூர், அணிச்சம்பாளையம், பாண்டமங்கலம், பாலப்பட்டி, மோகனூர், ஒருவந்தூர் உள்ளிட்ட காவிரிக்கரையோர பகுதிகளில், 3,000க்கும் அதிகமான ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.இங்கு பூவன், ரஸ்தாளி, மொந்தன், பச்சநாடன் போன்ற ரக வாழைகள் பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு விளைவிக்கப்படும் வாழைக்காய்கள், ப.வேலூரில் நடக்கும் தினசரி மார்க்கெட்டுக்கு ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. வரத்து அதிகரிக்கும் போது, தினமும் 1,500 முதல் 2,000 வாழைத்தார்கள் ஏலத்துக்கு கொண்டு வரப்படும்.அவற்றை நாமக்கல், சேலம், கரூர், ஈரோடு போன்ற மாவட்டங்களை சேர்ந்த வியபாரிகள் போட்டி போட்டி ஏலம் எடுத்து, விற்பனைக்காக பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரத்தை விட, வாழைத்தாரின் விலை இந்த வாரம் அதிகரித்துள்ளது.

நேற்று நடந்த ஏலத்தில், 400 வாழைத்தார்கள் மட்டுமே கொண்டு வரப்பட்டிருந்தது. அதன் காரணமாக, கடந்த வாரம் 150 ரூபாய்க்கு ஏலம் போன பூவன் வாழைத்தார், இந்த வாரம் 250 ரூபாய்க்கு ஏலம் போனது. 150 ரூபாய்க்கு ஏலம் போன ரஸ்தாளி இந்த வாரம் 250 ரூபாய்க்கும், 200 ரூபாய்க்கு ஏலம் போன மொந்தன் வாழைத்தார் (100 எண்ணிக்கை) 300 ரூபாய்க்கும், 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பச்சநாடன் அதே விலைக்கும் ஏலம் போனது. இந்த விலை உயர்வால் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தொடர் மழை காரணமாக, வரத்து குறைந்துள்ளதால் இந்த விலை உயர்வு என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**தொடரும் மழையால் காய்கறி விலை சரிவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,03:36 IST

ஈரோடு:ஈரோட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், கடைவீதி மற்றும் பெரிய மார்க்கெட் பகுதிகள், மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடின.ஈரோடு, "நேதாஜி' பெரிய மார்க்கெட்டில், 700க்கும் மேற்பட்ட காய்கறி கடைகள் உள்ளன. தர்மபுரி, சத்தி, கோபி, அந்தியூர், ஊட்டி பகுதியில் இருந்தும், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்தும், காய்கறிகள் மற்றும் பழங்கள், ஈரோடு பெரிய மார்க்கெட்டுக்கு வரத்தாகின்றன.தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால், வெங்காயம், தக்காளி விளைச்சல் பாதிப்பால், வரத்தும் பெரிதும் குறைந்துள்ளது. கடந்த வாரம் கிலோ 15 முதல் 20 ரூபாய்க்கு விற்ற தக்காளி, 10 ரூபாய் அதிகரித்து, கிலோ 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.எனினும், இதர காய் வகைகளான பீட்ரூட், கேரட், கத்தரிக்காய், முட்டைக்கோஸ், முள்ளங்கி, பீன்ஸ், அவரைக்காய், முருங்கை, காலிஃப்ளவர், உருளை உள்ளிட்ட காய்கறிகள் கிலோவுக்கு எட்டு ரூபாய் வரை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஈரோடு பெரிய மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் சங்க தலைவர் பழனிச்சாமி கூறியதாவது:ஈரோட்டில் பெய்து வரும் மழையால், கடைவீதிக்கும், மார்க்கெட்டுக்கும் மக்கள் வரத்து வெகுவாக குறைந்துள்ளது. "நேதாஜி' பெரிய மார்க்கெட் கடைகளில் வியாபாரமின்றி, வெறிச்சோடி கிடக்கிறது. காய்கறி விற்பனை குறைவால், விலை கிலோவுக்கு ஐந்து முதல் எட்டு ரூபாய் வரை, விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.
விலை குறைந்த போதும், மழை காரணமாக மக்கள் வெளியே வரமுடியாமல் வீட்டிலேயே முடங்கி கிடக்கின்றனர். விற்பனையின்றி, வியாபாரிகள் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**கொப்பரை விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,03:17 IST

கோபிசெட்டிபாளையம்: கொப்பரை உற்பத்தி குறைந்த நிலையில், விலை வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.ஈரோடு மாவட்டத்தில் கோபி வட்டார பகுதிகளான பங்களாப்புதூர், அயலூர், கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், டி.என்.பாளையம், கொளப்பலூர், சிறுவலூர், குள்ளம்பாளையம், குருமந்தார், கடத்தூர், பாரியூர், மேவாணி, வெள்ளாங்கோயில் உள்ளிட்ட பகுதிகளில் தேங்காய் பருப்பு உற்பத்தி அதிகளவில் செய்யப்படுகிறது. சென்ற சில நாட்களாக கோபி பகுதியில் பெய்த மழையால், உடைத்த தேங்காய் பருப்பை காய வைக்க முடியாமல் விவசாயிகள் திணறினர்.கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு குறைந்தளவில் தேங்காய் பருப்பு விற்பனைக்கு வருகிறது. கொப்பரை வரத்து குறைந்தபோதும், விலை குறைவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நேற்றைய மார்க்கெட்டுக்கு, 206 மூட்டை

கொப்பரை வரத்தானது. கிலோ, 50.19 முதல் 52.29 ரூபாய்க்கு விற்பனையானது. சென்ற வாரத்தை விட நடப்பு வாரம் ஒரு ரூபாய் வீழ்ச்சியடைந்துள்ளது.

**நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கமிஷன்**
பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,00:49 IST

திருச்சி: நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும், 40 கிலோ நெல்லுக்கு, 32 ரூபாய் கமிஷன் பிடித்துக்கொள்வதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.திருச்சி மாவட்டத்தில் குறுவை சாகுபடியை முன்னிட்டு, மொத்தம் 16 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. லால்குடி தாலுகாவில் 15, துறையூர் தாலுகாவில் 1 என மொத்தம் 16 உள்ளன.கடந்த அக்டோபர் 14ம் தேதியிலிருந்து நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதுவரை திருச்சி மாவட்டத்தில் 1,469 மெட்ரிக் டன் நெல், கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.கிரேடு "ஏ' நீளம் ரகம் நெல்லுக்கு (100 கிலோ) 1,110 ரூபாய் மத்திய அரசும், மாநில அரசு ஊக்கத்தொகை 70 ரூபாய் சேர்த்து மொத்தம் 1,180 ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.அதேபோல், பொதுரகம், 100 கிலோ நெல்லுக்கு மத்திய அரசு 1,080 ரூபாய், மாநில அரசு ஊக்கத்தொகையாக, 50 சேர்த்து மொத்தம் 1,130 ரூபாய் வழங்கப்படுகிறது. நெல்லின் ஈரப்பதம், 17 சதவீதம் மட்டுமே இருக்க வேண்டும்.நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 40 கிலோ நெல்லுக்கு 472 ரூபாய் தரப்படுகிறது.

அதில், 32 ரூபாய் கமிஷனாக கொள்முதல் நிலையத்தில் பிடித்துக் கொள்வதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.அன்பில், கள்ளிக்குடி, ஆலங்குடி மஹாஜனம், திண்ணியம், நத்தமாங்குடி, கோமாகுடி ஆகிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 32 ரூபாய் வரை கமிஷன் பிடித்துக் கொள்வதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.இதுகுறித்து விவசாயி அய்யாக்கண்ணு கூறுகையில், ""40 கிலோ நெல்லுக்கு 32 ரூபாய் கமிஷன் பிடிக்கின்றனர்.

சாக்கு எடை 0.65 கி.கி., சேர்த்து மெத்தம் 40.65 கிலோ தான் மூட்டை கணக்கிடப்படும். ஆனால், 40.65 கிலோ என கணக்கிடப்பட வேண்டிய மூட்டையை, 41.50, 42.50 கிலோ வரை எடை கூடுதலாக கணக்கிடுகின்றனர். நத்தமாங்குடி அய்யனார் கோவில் கொள்முதல் நிலையத்தில், 20 லோடு நெல் அப்படியே உள்ளது. நெல் எடுக்க லாரி வரவில்லை,'' என்றார்.தமிழ்நாடு நுகர்பொருள் வணிபக்கழகம் அதிகாரி ஒருவர் கூறுகையில், ""நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் யாரும் பணம் வாங்கக்கூடாது என கண்டிப்பாக தெரிவித்துள்ளோம்.

அதையும் மீறி யாராவது பணம் வாங்குவதாக விவசாயிகள் புகார் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இன்று இறக்கப்படும் லோடுகள் நாளை தான் எடுக்கப்படும். விவசாயிகள் வழங்கும் நெல் எடை போட்டு தான் கொள்முதல் நிலையத்தில் தேக்கி வைக்கப்படுகிறது. எடை

குறைந்தால் கொள்முதல் நிலையத்தில் பணியாற்றுபவர்கள் தான் பணம் கட்ட வேண்டும் என்பதால், பெரிய அளவில் நெல் தேக்கமடைய வாய்ப்பில்லை," என்றார்.

**வேளாண் இயந்திரம் இயக்குவது எப்படி?கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி**
பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,00:45 IST

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் 2011-12ம் ஆண்டில் 50 கிராமப்புற இளைஞர்களுக்கு வேள ாண் இயந்திரங்கள் இயக்குதல் பராமரித்தல் குறித்த பயிற்சி நவம்பர் 16ம் தேதி முதல் ஆறு மாத காலத்துக்கு அறிவிக்கப்பட்டுளளது. இதற்கான நேர்முகத் தேர்வு 11ம் தேதி நடக்கிறது.விண்ணப்பதாரர்கள் 01.09.2011ம் தேதி அன்று 35 வயது மிகாமலும், குறைந்தபட்சம் 8ம் வகுப்பு தேர்ச்சியுடன் பயிற்சி அளிக்கும் இடத்திலிருந்து தினமும் வந்து போகும் தூரத்தில் வசிக்க வேண்டும். அனைத்து நாட்களும் பயிற்சியில் கலந்து கொள்பவருக்கு முழு உதவித் தொகையுடன் காலை, மாலை, தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்படும்.இப்பயிற்சியில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளான டிராக்டர், பவர் டிரில்லர், ரோட்டவேட்டர், ஸ்பிரேயர், அறுவடை இயந்திரம், கதிரடிக்கும் இயந்திரம், கரும்பு வெட்டும் இயந்திரம், தென்னைமட்டை தூளாக்கும் இயந்திரம், நாற்று நடவு இயந்திரம், களை எடுக்கும் கருவி, லேசர் மூலம் நிலம் சமன்படுத்தும் கருவி, சொட்டுநீர்ப்பாசன அமைப்புகள், மின் மோட்டார், நீர் மூழ்கி மோட்டார் மற்றும் இதர பண்ணை கருவிகள் இயக்குதல் மற்றும் பழுது நீக்குதல் குறித்த செயல்முறை பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பமுள்ள கிராமப்புற இளைஞர்கள் தங்கள் பெயர், தகப்பனார் பெயர், முழு முகவரி, வயது மற்றும் கல்வி சான்றிதழ், தாங்கள் கிராமத்துக்கும் திருச்சிக்கும் இடையே உள்ள தூரம் (கி.மீ.,), மொபை ல்ஃபோன் எண் ஆகியவற்றை வெள்ளைத் தாளில் விண்ணபப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, ரேஷன் கார்டு மற்றும் கல்வி தகுதி சான்று நகல் இணைத்து உதவி செயற் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, இயந்திரக் கலப்பைப் பணிமனை, எண்-1, வ.உ.சி.,சாலை, திருச்சி-1 என்ற முகவரிக்கு நவம்பர் 10ம் தேதிக்குள் விண்ணப்பம் செய்து தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். 0431-2460928 என்ற ஃபோன் எண்ணில்சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.இத்தகவலை கலெக்டர் ஜெயஸ்ரீ தெரிவித்துள்ளார்.

**தொடர்மழை எதிரொலிவெங்காய சாகுபடிவிவசாயிகள் கவலை**
பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,01:14 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் யூனியனு க்குட்பட்ட பஞ்சாயத்து பகுதிகளில் கடந்த சில நாட்களால் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் வெங்காயத்தை சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.கிருஷ்ணராயபுரம் யூனியனுக்குட்பட்ட பஞ்சாயத்து பகுதிகளான வயலூர், சிவாயம், பஞ்சப்பட்டி, கருப்பத்தூர், சித்தலவாய், லட்சுமண ம்பட்டி,

புதுப்பட்டி ஆகிய பகுதிகளில் பரவலாக சின்ன வெங்காயம் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது சின்ன வெங்காயம் அனைத்தும் நல்ல முறையில் வளர்ச்சி அØ டந்து அறுவடை செய்யும் தருவாயில் உள்ளது.இந்த நிலையில் வடகிழக்கு பருவமலை மற்றும் வங்க கடலில் எழுந்துள்ள புயல் சின்னம் காரணமாக பயிரிடப்பட்டுள்ள சின்ன வெங்காயத்தை அறுவடை செய்ய முடியாத நிலை உள்ளது. இதனால் விளைச்சல் அடைந்த சின்ன வெங்காயம் நிலங்களில் மழை தண்ணீரில் மூழ்கியுள்ளதால் வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளனர். "மழையால் பாதிக்கப்பட்ட சின்ன வெங்காயத்துக்கு விலை குறைவாக கிடைக்கும்' என விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

**காய்கறி தோட்டம்இலவச பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,04:12 IST

மதுரை:மதுரை ரூட்செட் நிறுவனத்தில், நவ.,20ல் மொட்டை மாடியில் காய்கறி தோட்டம் அமைக்க, இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. தோட்டம் அமைக்க ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். மதிய உணவு இலவசம். கனரா வங்கி, சிண்டிகேட் வங்கி, ஸ்ரீதர்மஸ்தலா மஞ்சுநாதேஸ்வரா கல்வி அறக்கட்டளை ஏற்பாடுகளைச் செய்துள்ளன. பங்கேற்க விரும்புபவர்கள், நவ.,15க்குள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ரூட்செட் பயிற்சி நிலையம், விமான நிலைய சாலை, பெருங்குடி, மதுரை - 625 022. போன் : 73585 56656.

**நெல் கொள்முதல் நிலையம்திறக்க விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 03,2011,04:12 IST

சோழவந்தான்:சோழவந்தான் உட்பட மூன்று இடங்களில் நெல்கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். சோழவந்தான் பகுதியில் முதல்போகம் நெல் அறுவடை பணி நடக்கிறது. தற்போது பெய்யும் மழையால் நனைந்த நெல்லை வியாபாரிகள் வாங்க மறுக்கின்றனர். ஒரு மூடை ரூ.530 க்கு
ஏற்கனவே விற்கப்பட்டது. தற்போது ரூ.430 க்கு விற்கப்படுகிறது. இதனால் மூடைக்கு ரூ.100 இழப்பு ஏற்படுகிறது. சோழவந்தான், நாச்சிக்குளம், குருவித்துறை, தென்கரை, முள்ளிப்பள்ளம் பகுதிகளில் நெல்கொள்முதல் நிலையம் முன்பு செயல்பட்டது. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைத்தது. இரண்டு மாதங்களுக்கு முன் இந்த நிலையங்கள் நிறுத்தப்பட்டது. அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்யமுடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். சோழவந்தான், குருவித்துறை, நாச்சிக்குளம் பகுதியில் மீண்டும் கொள்முதல் நிலையம் திறக்கவேண்டும், என விவசாய சங்கத்தினர் கலெக்டர் சகாயத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

**தொடர் மழையால் தோட்டக்கலை பயிர்கள் சேதம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,22:57 IST

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பெய்த மழை காரணமாக 200 ஏக்கர் தோட்டக்கலை பயிர்கள் சேதமடைந்தன.தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த 24ம் தேதி துவங்கியது. இதன் காரணமாக மாவட்டத்தில் கடலோர பகுதிகளில் பலத்த மழையும், பிற பகுதிகளிலும் பரவலாகவும் மழை பெய்து வருகிறது. இந்த தொடர் மழை காரணமாக 200 ஏக்கர் தோட்டக்கலை பயிர்களான கத்திரி, வெண்டை உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் தண்ணீரில் மூழ்கி சேதமடைந்தன.காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் பகுதியில் அகரபுத்தூர், சித்தமல்லி, அறந்தாங்கி, மடப்புரம், வெங்கடேசபுரம், தண்டமலை, குறுங்குழி, வீராணந்தபுரம் ஆகிய பகுதியில் 100 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருந்த கத்திரி, வெண்டை, சாமந்தி பூ மழையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.சிறுபாக்கம்: சிறுபாக்கம் மற்றும் வேப்பூரைச் சுற்றியுள்ள அடரி, ரெட்டாக்குறிச்சி, மாங்குளம், நல்லூர், கண்டபங்குறிச்சி கிராமங்களைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள் நீர்ப்பாசன நிலங்களில் பயிரிட்டுள்ள பூக்கள் பயிர்களான மல்லிகை, சம்பங்கி, கனகாம்பரம், கோழிக்கொண்டை, ரோஸ் உள்ளிட்ட வை முற்றிலும் சேதமடைந்தன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.குறிஞ்சிப்பாடி: குறுவை சாகுபடி செய்து அறுவடைக்குத் தயாராக இருந்த 60 ஏக்கர் விளை நிலங்களில் தண்ணீர் சூழ்ந்துள்ளதால் நெற்பயிர்கள் தண்ணீரில் சாய்ந்துள்ளது.இதனால் குறிப்பிட்ட நேரத்தில் அறுவடை செய்ய முடியாமல் உள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் நெற்பயிர்கள் முற்றிலும் சேதமடையும் அபாயம் உள்ளது

**பட்டுக்கூடு உற்பத்தி விழிப்புணர்வு கூட்டம்: உற்பத்தியாளர்களுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,23:37 IST

உடுமலை : உடுமலை அருகே பள்ளிவலசில், மத்திய பட்டு வாரியம் சார்பில், பட்டுக்கூடு உற்பத்தி குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. பட்டு வளர்ச்சி துறை இளநிலை ஆய்வாளர் அழகுராமலிங்கம் வரவேற்றார். மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ் பேசியதாவது:மழை காலங்களில், மல்பெரி சாகுபடி மற்றும் இதர சாகுபடி மேற்கொண்டுள்ள விவசாயிகள், நீர் சேமிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். விளை நிலங்களிலிருந்து நீர் வீணாக வெளியில் செல்லாதவாறு, வரப்புகளை உயர்த்தி அமைப்பதுடன், பண்ணைக் குட்டை அமைக்க முன்வர வேண்டும். மல்பெரி செடி பயிரிட்டு பட்டுக்கூடு வளர்க்க முன்வரும் விவசாயிகள், நீர் நிர்வாகத்தை முறையாக பின்பற்ற வேண்டும். நேரடியாக தண்ணீர் பாய்ச்சும் முறையில், மண் வகையை பொறுத்து, ஆறு அல்லது ஏழு நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது. சொட்டு நீர் முறையில், ஒரு நாள் விட்டு ஒரு நாள், செடிகளுக்கு பாய்ச்ச வேண்டும்.உடுமலை பகுதியில் தற்போது பருவமழை பெய்து வருவதால், மண் வளம் மற்றும் நீர்பிடிப்பு தன்மையை அதிகரிக்க, சில பணிகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, விளைநிலங்களில் தக்கை பூண்டு, ஏக்கருக்கு 15 கிலோ என்ற விகிதத்தில், ரைசோபியம் நுண்ணுயிரி உரத்துடன் கலந்து விதைக்க வேண்டும். தக்கை பூண்டு பூ விடும் தருணத்தில் மடக்கி உழவு செய்ய வேண்டும். அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்ற உரங்களை, மண்ணை வளப்படுத்த பயன்படுத்தலாம். புதிய தொழிற்நுட்பங்களை பயன்படுத்தி, மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுக்கூடு வளர்ப்பில் ஈடுபட்டால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். மத்திய, மாநில அரசுகள் சார்பில், பட்டுக்கூடு வளர்ப்பு தொழிலுக்கு மானியம், தொழிற்நுட்ப உதவி வழங்கப்படுகிறது.இவ்வாறு, விஞ்ஞானி செல்வராஜ் பேசினார்.கணக்கம்பாளையம் மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**தேயிலை உற்பத்தி தூள்; விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,23:37 IST

வால்பாறை : வால்பாறையில் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.வால்பாறையில் பெய்து வரும் மழையால், மேல்நீராறு, கீழ்நீராறு அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணை முழு கொள்ளளவை எட்டியதால், சேடல்டேம் வழியாக பரம்பிக்குளத்துக்கும், காடம்பாறை அணை நிரம்பியதால், அப்பர் ஆழியாறு வழியாக ஆழியாறு அணைக்கும் நீர் திறந்து விடப்பட்டது. சோலையாறு அணையிலிருந்து தினமும் 70 மெகாவாட் மின்சாரமும், காடம்பாறை அணையிலிருந்து சுழற்சி முறையில் தினமும் 400 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகிறது. தொடர்ந்து பெய்து வரும் கன மழையால், அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. தேயிலை உற்பத்தியும் அதிகரித்துள்ளதால், வாரத்தில் அனைத்து நாட்களிலும், தேயிலை பறிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையின் அளவு (செ.மீ.,ல்) வால்பாறை 8 - சோலையாறு 10 - மேல்நீராறு 8- கீழ்நீராறு 3.

**திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் விவசாயிகளுக்கு பம்பர் விளைச்சல்,**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,22:01 IST

தேனி:திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் விவசாயிகளுக்கு பம்பர் விளைச்சல் கிடைத்துள்ளது. ஒரு எக்டேருக்கு 10,352 கிலோ விளைவித்து விவசாயி புதிய சாதனை படைத்துள்ளார்.தேனி மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடிக்கான அறுவடை தொடங்கி உள்ளது. திருந்திய நெல் சாகுபடி முறைகள் கடைபிடிக்கப்பட்டதால் அனைத்து இடங்களிலும் விளைச்சல் அதிகரித்துள்ளது.சின்னமனூரை சேர்ந்த விவசாயி எஸ்.நஷீர் கோரக்நாத் என்ற உயர்ஒட்டு ரகத்தை சாகுபடி செய்திருந்தார். இவருக்கு ஒரு எக்டேருக்கு 10,352 கிலோ விளைச்சல்

கிடைத்துள்ளது. கடந்த மூன்று ஆண்டில் இப்படி ஒரு பம்பர் விளைச்சல் தேனி மாவட்டத்தில் கிடைத்ததில்லை.

தவிர விவசாயத்துறையும், விவசாய புள்ளியியல் துறையும் எடுத்த விவரங்களின் அடிப்படையில், மாவட்டத்தின் சராசரி விளைச்சல் எக்டேருக்கு 9,350 கிலோவாக உள்ளது. சராசரி விளைச்சல் 8,500 கிலோவை விட இது அதிகம். எனவே இந்த சாகுபடியில் மாவட்டம் முழுவதும் விவசாயிகளுக்கு பம்பர் சாகுபடி கிடைத்துள்ளது.
விவசாய இணை இயக்குனர் இமாம்தீன் கூறியதாவது: திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிர் செய்தததால் பயிர்களுக்கு நல்ல காற்றோட்டம், சரியான நீர் பாய்ச்சுதல், உர பகிர்மானம், விளைச்சல் கிடைத்துள்ளது. தவிர கடந்த ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்பட்டு ஜூலை மாதம் நடவு தொடங்கி சரியான பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இம்முறை நெல்லில் பூச்சி தாக்குதல்களும் இல்லை. எனவே விளைச்சல் அதிகரித்துள்ளது,'என்றார்.

**உரம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 02,2011,22:22 IST

திருப்புவனம்:மழை தொடர்வதால் நடவுப்பணிக்கு ஆட்கள் கிடைக்காமல் அதிக கூலி கொடுத்து ஆட்களை தேடும் நிலை உள்ளது. வானம்பார்த்த பகுதிகளிலும் கண்மாய் நிரம்பி வருவதால் கடந்தாண்டைவிட விவசாய பணிகள் தீவிரம் அடைந்துள்ளன. நாற்று நடவுக்கு முன் உரங்கள் இடவேண்டியுள்ளதால் உரத்தேவை அதிகரித்துள்ளது. இதை வாய்ப்பாக்கும் உரக்கடைக்காரர்கள் அதிக விலைக்கு விற்கின்றனர். நியாய விலையில் உரங்கள் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

5 லட்சம் உப்பு மூட்டை தேக்கம்

பதிவு செய்த நாள் : 11/3/2011 0:6:15



நாகை : வடகிழக்கு பருவ மழையால் வேதாரண்யத்தில் உப்பு ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் கடந்த 10 நாட்களாக மழை பெய்து வருகிறது. வேதாரண்யத்தில் மழை காரணமாக உப்பு ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 5 லட்சம் உப்பு மூட்டைகள் தேங்கி உள்ளன. மாவட்டத்தில் மழை காரணமாக பயிர் சேதம் பற்றி விவரம் இல்லை. எனினும், தொடர் மழையால் உப்பளங்களில் தண்ணீர் தேங்கி உப்பு உற்பத்தி முற்றிலும் முடங்கியுள்ளது.

காபி ஏற்றுமதி 25 சதவீதம் உயர்வு

பதிவு செய்த நாள் : 11/3/2011 0:5:25



பெங்களூர்: இந்த ஆண்டின் ஜனவரி&அக்டோபர் வரையிலான 10 மாதங்களில் நாட்டின் காபி ஏற்றுமதி 3.10 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலத்தில் ஏற்றுமதியான 2.48 லட்சம் டன்னைவிட இது 25 சதவீதம் அதிகம். அரேபிகாஸ், ரோபஸ்டா ரக காபிக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அதனால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் 10 மாதங்களில் காபி ஏற்றுமதி மதிப்பு 71 சதவீதம் அதிகரித்து ஸி4,334 கோடியானது. ஒரு டன்

காபி விலை ஸி1.39 லட்சமாக இருந்தது. ஏற்றுமதி காபிக்கு மார்ச் & ஜூனில் நல்ல விலை கிடைத்த போதும், கடந்த 3 மாதங்களில் சற்று குறைந்ததாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

***பலத்த மழை எதிரொலி: ஆழியாறு அணை நிரம்பியது; மதகுகளில் தண்ணீர் திறப்பு பாலாற்றங்கரையில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலை வெள்ளம் சூழ்ந்தது***

*ஆனைமலை,நவ.3–*

*நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதை தொடர்ந்து நிரம்பிய ஆழியாறு அணையில் இருந்து மதகுகள் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. பாலாற்றங்கரையில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலை வெள்ளம் சூழ்ந்தது.*

*ஆழியாறு அணை நிரம்பியது*

*பொள்ளாச்சி அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்து உள்ளது ஆழியாறு அணை. 120 அடி கொள்ளளவு கொண்ட இந்த ஆழியாறு அணை லட்சக்கணக்கான ஏக்கர் விவசாய நிலத்தின் பாசனத்திற்கு ஜீவநாடியாக விளங்கி வருகிறது. கடந்த ஜூன் மாதம் தொடங்கிய தென்மேற்கு பருவமழை காரணமாக அணையின் நீர்மட்டம் கிடு கிடு என உயர்ந்து தனது முழு கொள்ளளவான 120 அடியை எட்டியது.*

*இதைதொடர்ந்து அணையில் இருந்து உபரி நீர் 11 மதகுகள் வழியாக திறந்து விடப்பட்டது. பின்னர் புதிய ஆயக்கட்டு மற்றும் பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகள் மற்றும் குடிநீர் ஆதாரம் ஆகியவற்றிற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதைத் தொடர்ந்து அணையின் நீர்மட்டம் வேகமாக குறையத் தொடங்கியது.*

*தண்ணீர் திறப்பு*

*இந்தநிலையில் கடந்த ஒரு வார காலமாக ஆழியாறு அணையின் நீர்ப்பிடிப்புபகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு வரும் நீர்வரத்து அதிகரித்ததால் நேற்று முன்தினம் இரவு அணையின் நீர்மட்டம் 119.80 கன அடியை எட்டியது. இதைத்தொடர்ந்து பொதுப்பணித் துறையினர் அணைக்கு வரும் நீரின் அளவை தீவிரமாக கண்காணித்து வந்தனர். இரவு நேரம் செல்ல செல்ல அணைக்கு வரும் நீர்வரத்து வினாடிக்கு ஆயிரம் கன அடியை தாண்டியது.*

*இதைத்தொடர்ந்து அணையின் பாதுகாப்பை கருதி பொதுப்பணித் துறையினர் உபரி நீரை 8 மதகுகள் வழியாக நேற்று முன்தினம் இரவு தண்ணீர் திறந்து விட்டனர். வினாடிக்கு ஆயிரம் கன அடிக்கு மேல் தண்ணீர் திறந்து விடப்பட்டதால், ஆழியாறு ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. இதனால் ஆழியாறு ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. நேற்று அதிகாலை 5 மணிக்கு நீர்வரத்து குறைந்ததால், அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றுவது நிறுத்தி வைக் கப்பட்டது.*

மீண்டும் திறப்பு

இந்தநிலையில் நேற்று காலை ஆனைமலை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கன மழை பெய்தது. இதனால் மீண்டும் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியது.

இதைத்தொடர்ந்து நேற்று பகல் ஒரு மணிக்கு பின்னர் அணையின் 4 மதகுகள் வழியாக வினாடிக்சு 200 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

இதுகுறித்து ஆழியாறு அணை பொதுப்பணித்துறையினர் கூறியதாவது:–

தென் மேற்கு பருவமழையின் போதே அதிகபட்ச இருப்பு இருந்ததால், வடகிழக்கு பருவமழை தொடங்கிய சில நாட்களிலேயே ஆழியாறு அணை தனது முழுகொள்ளளவை எட்டி நிரம்பியது. இந்த ஆண்டில் மட்டும் ஆழியாறு அணை 2–வது முறையாக தற்போது நிரம்பி உள்ளது.

ஆழியாறு பகுதியில் லேசான மழை பெய்தபோதும், நீர்ப்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்து வருவதால் அணை நிரம்பி உள்ளது. அணைக்கு வரும் நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் கரை யோரம் மற்றும் தாழ்வான பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

பாலாற்றில் வெள்ளப்பெருக்கு


ஆனைமலை வட்டாரப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் வடகிழக்கு பருவமழை காரணமாக பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. பாலாற்றில் வரலாறு காணாத அளவிற்கு தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் பாலாற்றங் கரையில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலை சுற்றி வெள்ள நீர் சூழ்ந்து இருப்பதுடன் கோவிலுக்கு செல்லும் படிகளை மூழ்கடித்து உள்ளது. இதனால் நேற்று காலை முதல் கோவிலில் பூஜைகள் நடை பெறவில்லை.

மேலும் வெள்ளப்பெருக்கு காரணமாக பக்தர்களும் கோவிலுக்கு செல்லவில்லை. பக்தர்களின் பாதுகாப்பு கருதி வெள்ள நீர் வடியும் வரை கோவிலுக்கு செல்ல அனுமதி இல்லை என்று கோவில் செயல் அலுவலர் யுவராஜ் தெரிவித்தார்.



# வேளாண்மை செய்திகள்

## அதிக விளைச்சல் தரும் புதிய ரக சோளம்



ஆசிய, ஆப்பிரிக்க நாட்டு மக்களின் முக்கிய உணவு பயிர் சோளம். இந்தியாவில் நெல், கோதுமைக்கு அடுத்து மிக முக்கியமான உணவுப்பயிர். சோளம் கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாக விளங்குகிறது. இது புல்வகையை சேர்ந்த விதையிலை தாவரம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்குள் பரவியதாக கூறப்படுகிறது.

### சோளம் சாகுபடி

சோளத்தில் அதிக அளவு புரதம், மாவு, நார், உயிர் சத்துகளும், வைட்டமின்கள், தாது உப்புகள் மற்றும் மிகக்குறைந்த கொழுப்பும் உள்ளதால் மனித உடலுக்கு ஏற்ற சத்துள்ள உணவாக கருதப்படுகிறது. இது எல்லா வகை மண்ணிலும், தட்ப வெட்ப சூழ்நிலைகளிலும் வளரக்கூடியது. குறிப்பாக வறண்ட பகுதிகளிலும், வளமற்ற நிலங்களிலும் பயிரிட ஏற்றது.

தமிழ்நாட்டில் 2.38 லட்சம் எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு, 2.21 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் சராசரி விளைச்சல் 929 என்ற அளவில் உள்ளது. சோள தானியங்களில் 0.13 சதவீதம் லைசின் மற்றும் மெத்தியோனின் உள்ளது. வீரிய ஒட்டு ரகங்கள், உயர் விளைச்சல் ரகங்களை சாகுபடி செய்வதால் மகசூலை அதிகரிக்கலாம்.

### புதிய ரகங்கள்

உயர் விளைச்சல் தரும் கோ எஸ் 28 வெள்ளை தானிய சோள ரகம். 100 முதல் 105 நாட்கள் வயது கொண்டது. இவை கூடுதல் விளைச்சல் தரக்கூடியது. இறவையில் 4568 கிலோ தானிய விளைச்சலும், 12.6 டன் தட்டை விளைச்சலும் தரவல்லது. இந்த ரகம் ஈ, கதிர் பூசாண நோய் தாக்குதல்களை தாங்கி வளரும் தன்மை கொண்டது.

கோ எஸ் 30 ரகம், மானாவாரியில் எக்டேருக்கு 2,780 கிலோவும், 6,220 கிலோ உலர் தட்டு விளைச்சல் கொடுக்கக்கூடியது. குருத்து ஈ, தண்டு துளைப்பானுக்கு மிதமான எதிர்ப்பு தன்மை கொண்டது. வெண் முத்து தானியங்களை கொண்டது. மானாவாரி, இறவையில் தமிழகமெங்கும் சாகுபடி செய்ய ஏற்றது.

### சாகுபடி பருவம்

சோளத்தை மானாவாரியாக ஜூன்-ஜூலை மற்றும் செப்டம்பர்-அக்டோபரிலும், இறவையாக ஜனவரி-பிப்ரவரி மற்றும் மார்ச்-ஏப்ரல் மாதங்களில் சாகுபடி செய்யலாம். சாகுபடிக்கு முன் நிலத்தை 3 முறை நன்றாக புழுதி உழவு செய்ய வேண்டும். அகலபாத்தி முறை பின்பற்றப்படுவதால் நிலத்தை சமன் செய்து 2 மீ* 2 மீ அளவில் பாத்திகளில் வரிசைக்கு வரிசை 45 செ.மீ. இடைவெளியும், செடிக்கு செடி 15 செ.மீ. இடைவெளியும் இருக்குமாறு அமைக்க வேண்டும்.

1 எக்டேருக்கு தேவையான விதைகளை பொட்டாசியம் டை நைட்ரஜன் பாஸ்பேட் ரசாயனத்தில் 6 மணி நேரம் ஊறவைத்து, பின்னர் 5 மணிநேரம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். விதைத்த 3-ம் நாள் உயிர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் 8 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

### உரமிடுதல்-அறுவடை

அடியுரமாக ஒரு எக்டேருக்கு 12½ டன் தொழு உரமும், 40 கிலோ தழைச்சத்தும், 20 கிலோ மணிச்சத்தும் இட வேண்டும். விதைத்த 30 மற்றும் 45 நாட்களில் களை எடுக்க வேண்டும். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றியவுடன் அறுவடை செய்யலாம். கதிர்களை களத்தில் காயவைத்து அடித்து விதைகளை பிரிக்க வேண்டும். பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டுக்கு பரிந்துரைக்கப்பட்ட பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும்.

-தகவல்: **வீரபத்திரன்**, செல்வி, சிறு தானியங்கள் துறை, வேளாண் பல்கலைக்கழகம், **கோவை.**

## புதிய ரக கொய்மலர் 'ஸ்டெர்லிட்சியா'



**ஸ்டெர்லிட்சியா** என்பது திறந்தவெளியில் வளரக்கூடிய ஒருவகை புதியரக கொய்மலர். இந்த மலர் பறவையின் வடிவத்தில் காணப்படுவதால், 'சொர்க்கத்து பறவை' என்றும் அழைக்கப்படுகிறது.

### ஸ்டெர்லிட்சியா மலர்

ஸ்டெர்லிட்சியா அழகுக்காக வளர்க்கப்படும் மலர் செடியாகும். இந்த செடி காற்றோட்டமுள்ள மணற்பாங்கான அதிக சத்துக்கள் நிறைந்த மண் வகைகளில் வளரக்கூடியது. இந்த பயிர் தமிழகத்தில் கடல் மட்டத்திலிருந்து 1000 முதல் 1,500 மீட்டர் வரை உயரம் உள்ள மித வெப்ப மண்டலப்பகுதிகளில் நன்கு வளரும்.

இது வளர்வதற்கு 25 முதல் 45 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை தேவை. ஸ்டெர்லிட்சியா கிழங்குகள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. இதன் வேர்கள் ஆழமாக செல்வதால் கிழங்குகளை பிரித்தெடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். விதைகள் மூலமாகவும் இனப்பெருக்கம் செய்யலாம்.

### சாகுபடி முறை

விதைப்புக்கு முன்பு விதைகளை சூடான நீரில் பல மணி நேரங்கள் ஊற வைத்து, பிறகு விதைக்க வேண்டும். அதன்படி முளைக்க வைக்க 2 முதல் 3 மாதங்கள் வரை விதைப்புக்கு முன் 4 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலையில் வைத்திருந்து விதைக்க வேண்டும். விதைகள் முளைத்து 2 அல்லது 3 இலைகள் விடும் போது பாலித்தீன் பைகள் அல்லது தொட்டிகளில் வளர்க்க தொடங்கலாம்.

செடிகள் நடவு செய்வதற்கு முன்பு நிலத்தை நன்றாக உழுது பண்படுத்த வேண்டும். நாற்றுகளை 40 செ.மீ. நீள, அகல, ஆழமுள்ள குழிகளில் 1.25 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடவுக்கு முன்பு 5 கிலோ தொழு உரம், 200 கிராம் எலும்பு எரு, ½ கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை குழியில் போட்டு அதன்பின்னர் நடவு செய்ய வேண்டும்.

### உரமிடும் முறைகள்

செடியை நட்ட பிறகு மண்ணில் ஈரம் தொடர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். எலும்பு எரு, தொழு உரம், வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை செடிக்கு இட வேண்டும். 3 மாதத்திற்கு 1 முறை 2 கிலோ கலப்பு உரத்தை 100 சதுர மீட்டருக்கு அளிக்க வேண்டும். 2 மாதத்திற்கு ஒருமுறை வேப்பம் புண்ணாக்கை இடுவதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கலாம். ஸ்டெர்லிட்சியாவை பூச்சிகள் அதிகம் தாக்குவதில்லை. ஆனாலும் செதில் பூச்சிகள், மாவுப்பூச்சிகள் தாக்காமல் இருக்க 1 லிட்டர் நீரில் மெட்டாசிஸ்டாக்ஸ் என்ற பூச்சி கொல்லி மருந்தை 2 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். போட்டிரிடிஸ், பியூசேரியம் என்ற பூசணம் நோய் தாக்குவதை தடுக்க கார்பன்டசிம் என்ற மருந்தை 1 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

### அறுவடை

மலர்கள் நன்றாக மலர்ந்தவுடன் நீண்ட தண்டுகளுடன் அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்த மலர்களை 2 முதல் 3 மணி நேரத்திற்கு 100 டிகிரி செல்சியஸ் குறைந்த வெப்பநிலையில் வைத்திருந்து சந்தைக்கு அனுப்ப வேண்டும். அறுவடைக்கு பின் 10 சதவீத சர்க்கரை கரைசலிலோ அல்லது 150 பிபிஎம் சிட்ரிக் அமிலத்திலோ நனைத்து, 40 மணி நேரம் 22 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் வைத்திருந்து, பின்னர் பாலித்தீன் பைகளில் அடைத்து விற்பனை செய்யலாம்.

ஸ்டெர்லிட்சியா 2-வது வருடத்தில் இருந்து 1 செடிக்கு 15 முதல் 25 மலர்கள் வரை மகசூலாக கிடைக்கும். 1 மலர் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யலாம். பூஞ்சாடியில் 7 முதல் 14 நாட்கள் வரை வாடாமல் இருக்கும். நாள்தோறும் சாடியில் இருந்து எடுத்து தண்டின் அடிப்பாகத்தை சற்று வெட்டிவிட்டு தண்ணீர் வைப்பதன் மூலம் நீண்டநாள் வாடாமல் இருக்கும்.

-தகவல்: **ஆனந்த்**, அருள்மொழியான், சங்கரி, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், **ஏற்காடு.**

## மழை காலங்களில் கால்நடைகளை பாதுகாப்பாக வளர்க்கும் முறைகள்

**மழை** காலங்களில் நிலவும் தட்ப வெப்பநிலை கால்நடை வளர்ப்பில் சவாலான ஒன்றாக விளங்குகிறது. இத்தகைய காலங்களில் நோய்கிருமிகள் பெருக்கம் அதிகமாகி அவற்றின் வளர்ச்சியால் கால்நடைகளுக்கு நோய் தாக்குதல் அதிகம் ஏற்படுகிறது. இந்த பாதிப்பானது கால்நடைகளின் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துவதுடன் இறப்பு விகிதத்தையும் அதிகரிக்க செய்கிறது.

### மழைநீர் தேங்குதல்

மழை காலங்களில் கால்நடைகளின் கொட்டிலின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் மழை நீர் தேங்குவதை தவிர்க்க வேண்டும். இதனால் ஈ மற்றும் கொசுக்களின் உற்பத்தியை குறைக்க முடியும். இதே போல் பண்ணையில் சுற்றுபுறங்கள் மேடு பள்ளம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கிருமி நாசினி தெளிப்பதன் வாயிலாக கிருமிகளின் பாதிப்புகளை குறைக்கலாம்.

மாடுகள் கட்டப்பட்டு இருக்கும் தொழுவத்தின் தரையானது நன்கு சொரசொரப்பாகவும், கால்நடைகளுக்கு வழுக்காமலும் இருக்க வேண்டும். அந்த தரையில் மாட்டின் சிறுநீர் தேங்காமல் வழிந்தோடும் வகையில் போதுமான சாய்தளத்துடன் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

### பாதுகாக்கப்பட்ட தண்ணீர்

அதிக மழை பெய்யும் நேரங்களில் ஆடு மற்றும் மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப கூடாது. கொட்டிலில் வைத்து அதற்கு தேவையான தீவனங்களை கொடுத்து பராமரிக்க வேண்டும். இதே போல் மேய்ச்சலுக்கு செல்லும் ஆடு, மாடுகளை வெளியில் தண்ணீர் குடிக்க அனுமதிக்க கூடாது. முடிந்தவரை பண்ணையில் பாதுகாக்கப்பட்ட நீரை கொடுக்க வேண்டும்.

இதே காலத்தில் ஆடுகளில் குடற்புழுக்களின் தாக்கம் அதிகமாக இருக்கும். இதை தவிர்க்க மழை காலம் தொடங்குவதற்கு முன்னதாகவே கால்நடை மருத்துவரின் ஆலோசனை பெற்று ஆடுகளுக்கு தேவையான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்.

### எலிகள் நடமாட்டம்

மழை காலங்களில் கறவை மாடுகளுக்கு வழங்கப்படும் தீவனம் தரமானதாக இருக்க வேண்டும். ஏன் என்றால் கால்நடைகளுக்கு வழங்கும் அடர்தீவனமானது மழை காலங்களில் எளிதில் கெட்டுவிட வாய்ப்பு உள்ளது. எனவே தீவனங்களை பாதுகாக்கும் அறைகளை நன்கு சுத்தமாகவும், மழை நீரில் தீவனங்கள் நனையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த அறையில் எலிகளின் நடமாட்டம் இருப்பின் அவற்றை கண்டுபிடித்து உடனடியாக அழிக்க வேண்டும்.

### நோய் பராமரிப்பு முறைகள்

மழை காலங்களில் கால்நடைகளுக்கு சுவாசம் தொடர்பான நோய் ஏற்படும். இதை தவிர கோமாரி நோய் போன்ற சில தொற்று நோய்களும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மழை காலம் தொடங்குவதற்கு முன்னதாகவே கால்நடை மருத்துவரின் ஆலோசனையை பெற்று தேவையான தடுப்பூசிகளை போட வேண்டும்.

கறவை மாடுகளில் மடிவீக்க நோய் மழை காலங்களில் அதிகம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதை தடுக்க சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்து கொள்வது இன்றியமையாததாகும். மாடுகளின் மடி மற்றும் காம்பு பகுதிகளை பால்கறப்பதற்கு முன்பும் பின்பும், சுத்தமான தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும். தொழுவத்தின் தரைகளை கிருமிநாசினி கலந்த தண்ணீர் கொண்டு கழுவ வேண்டும்.

தகவல்:-**செல்வகுமார்**, பொற்செழியன், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், **ராஜபாளையம்.**